# யாழ்.குடாநாட்டில் வான்தாக்குதல்தீவிரம் நேற்று கடும் தாக்குதல்

விலை ரூபா 4-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 கார்த்திகை 16 ஜு: அவ்வல் பிறை 14 இதழ்: 221

யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 02-12-1990

(யாழ்ப்பாணம்)

யாழ். குடா. நாட்டில் மீண்டும் விமானத் தாக்குதல் அதிகரித்துள்ளது. கடந்த 3 தினங்களில் குடாநாட்டின் பல பகுதியிலும் பொம்மர், ஹெலி, சீ-பிளேன் தாக்குதல் நடாத்தியுள்ளது.

நேற்று ஊரடங்கு தளர்த்தப்பட்டபின் திருநெல்வேலி, அளவெட்டி, சாவகச்சேரி மற்றும் வலி வடக்கிலும் கடும் விமானத் தாக்குதல் நடைபெற்றுள்ளது.

பலாலி முகாமில் மூன்று பொம்மர்களும் இரு குண்டு வீச்சு விமானங்களும் தற்போது தரித்து நிற்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

## பொம்மர் தாக்குதல் அளவெட்டியில் பெண் பலி

(காங்கேசன்துறை - ஏழாலை நிருபர்)

அளவெட்டியில் நேற்று இடம்பெற்ற பொம்மர் தாக்குதலில் சிவபாதசிங்கம் விசாமூாச்சி (வயது 70) பலியானார். பலர் காயமடைந்தனர்.

நண்பகல் 11 மணியளவில் அளவெட்டிப்பகுதியை சுற்றி

(4ம் பக்கம் பார்க்க)

# ஸ்ரீலங்காவின் அழைப்பையேற்று சீன பிரதமர் லீ-பெங் வருகிறார்!

## ராணுவ உதவி இடைக்கலாம்

(கொழும்பு)

இலங்கையின் அழைப்பையேற்று சீனப்பிரதமர் திரு. லீ-பெங் இம் மாதம் 17-ம் திகதி கொழும்பு வரவுள்ளார். இவரது விஜயம் இராணுவ தளபாடத் தேவையில் பெருமளவைப் பூர்த்திசெய்யுமென இலங்கை அரசு நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

(4-ம் பக்கம் பார்க்க)

## துணிச்சல்மிகு கிராமவாசி நேற்று வீரமரணம்

(யாழ்ப்பாணம்)

மாங்குளம் முகாமிலிருந்து தப்பிய, இராணுவத்தை மடக்கி படுகாயமடைந்த துணிச்சல்மிகு 54 வயதான கிராமவாசி நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் மரணமானார்.

கடந்த வியாழக்கிழமை மாங்குளத்திற்கும் ஓமந்தைக்கும் இடையிலுள்ள 'நவ்வி' என்ற காட்டுப்பகுதியில் மாங்குளத்திலிருந்து தப்பிஓடிய இராணுவ சிப்பாயை மடக்கியசம்பவத்தில் படுகாயமடைந்து நேற்று முன்தினம் யாழ் ஆஸ்பத்திரியில்

(4-ம் பக்கம் பார்க்க)

## ஆனையிறவில் கடும்மோதல்: படையினருக்கு பலத்தசேதம்

[யாழ்ப்பாணம்]

ஆனையிறவு முகாமிலிருந்து நேற்று பகல் வெளியேற முற்பட்ட இராணுவம்மீது புலிகள் மேற்கொண்ட கடும் தாக்குதலால் நிலைகுலைந்த இராணுவம் பெரும் இழப்புகளுடன் பின்வாங்கிச்சென்றது.

இவ்வாறு நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் இயக்கச்சியை நோக்கி முன்னேற முற்பட்டபோதே கடும்

(4ம் பக்கம் பார்க்க)

## கசிப்பு வேட்டையில் ஆசிரியர், டாக்டர் சிக்கினர்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் நடைபெற்ற கசிப்பு வேட்டையில் பல ஆசிரியர்களும். டாக்டர்களும் மாட்டிக்கொண்டார்கள்.

(4ம் பக்கம் பார்க்க))

## கருணாநிதி ஆட்சி உடனே கலைக்கப்படலாம்!

(சென்னை)

தமிழகத்தில் தி. மு. க, ஆட்சி எவ்வேளையிலும் கலைக்கப்படும் சாத்தியம் அதிகரித்து வருவதாக பி. பி. ஸி. நேற்றுத் தெரிவித்தது:

இலங்கைத் தமிழ்ப் போராளிகளைச் சாட்டாக வைத்து இந்த ஆட்சிக் கலைப்பு இடம்

[4-ம் பக்கம் பார்க்க]

## இலங்கை உதவி கோரினால் இந்திய கடற்படை தயாராம்

(புதுடில்லி)

இலங்கை அரசு உதவி கோருமானால் அதற்கு உதவ "இந்திய கடற்படை ஆயத்த நிலையிலுள்ளதாக இந்திய ஜனாதிபதி திரு. ஆர். வெங்கட்ராமன் தெரிவித்தார்.

இந்திய கடற்படையின் 25-வது ஆண்டு நிறைவுவிழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்: அங்கு அவர் மேலும் பேசுகையில்;

அயல்நாடுகளின் உள்விவகாரங்களில் இந்தியா தலையிட விரும்பாதபோதும் அவை உதவி கோருமானால் அதற்கு உதவ இந்திய கடற்படை ஆயத்தமாக உள்ளதாகவும் இவர் தெரிவித்தார். (சி)

## மண்டைதீவு கடலில் கடற்படை பீரங்கித் தாக்குதல் இருவர் பலி; ஒருவர் காயம்

[யாழ்ப்பாணம்]

மண்டைதீவுக் கடற் பிராந்தியத்தில் பிளாஸ்ரிக் படகில் மீன் பிடித்துக்கொண்டிருந்தவர்களை நோக்கிக் கடற்படையினர் நடாத்திய பீரங்கித் தாக்குதலினால் இருவர் பலியானார்கள். ஒருவர் படுகாயம் அடைந்தார்.

நேற்று அதிகாலை ஒருமணியளவில் இப்பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்தசமயம் ரோந்து வந்த கடற்படைப் படகிலிருந்து மீனவர்களை

(4-ம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் மசூதிகளில் தமிழர் எதிர்ப்பு பிரசாரம்

[கொழும்பு]

தென்பகுதி முஸ்லிம் மசூதிகளில் கடந்த சில வாரங்களாக தமிழருக்கு எதிராகத் தீவிரப் பிரசாரங்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளது: 'வீடியோ, படக்காட்சி மூலமும் இப்பிரசாரம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

[4-ம் பக்கம் பார்க்க]

## கிழக்கில் சிவில் நிர்வாகமில்லை அரசு பெரும் கவலை

(மட்டக்களப்பு)

கிழக்கில் இராணுவ கட்டுப்பாட்டிலுள்ள பகுதியிலும் சிவில் நிர்வாகமில்லாதது குறித்து இலங்கைஅரசு பெரும் கவலையடைந்துள்ளது.

இதற்கான முயற்சிகளை மேற்கொள்ளும் நோக்கில் சர்வகட்சிகுழு ஒன்று நேற்று அம்பாறை-மட்டக்களப்பு [illegible] தாக அரசு தெரிவித்துள்ளது:

மேற்படி மாவட்டங்களில் கடந்த யூன்மாதத்திற்குப் பின் அரச அலுவலகங்கள், திணைக்களங்கள், பாடசாலைகள், இயங்குவதில்லையெனவும், சில நகர்ப்புற பாடசாலைகளே இயங்குவதாகவும் செய்திகள் தெரிவிப்பதும் குறிப்பிடத்தக்கது; (இ)

## திருமலையில் 200 தமிழர் இராணுவத்தால் கைது

(திருமலை)

திருமலை மாவட்டத்தில் சாம்பல்தீவு, சல்லி ஆகியகிராமங்களை நேற்று சுற்றிவளைத்த இராணுவத்தினர் இருநூறு பேரை கைது செய்துள்ளனர்.

இவர்கள் அனைவரையும் இரு பஸ்களில் அடைத்து ஏற்றிச் சென்றுள்ளனர். சிறுவர், வயோதிபர், பெண்கள், இளை

(4-ம் பக்கம் பரர்க்க)

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

நத்தார், புதுவருட வாழ்த்து மடல்களை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். (வியாபாரிகளிற்கு விசேட கழிவு உண்டு) ''மண்டேலா ரேடர்'' இல. 256, பருத்தித்துறை வீதி, நல்லூர்; ''அரஸ் ஜவுளியகம்'' 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

(சி-2158)

நுளம்பை விரட்ட நீம் தூபம் எண்ணெய் ஸ்நானத்திற்கு ஒலிவ் ஸ்நானப் பவுடர். மில்க்வைற் தயாரிப்புகள் இணுவில். திருநெல்வேலி, யாழ்.ஆஸ்பத்திரி வீதி அண்ணா கோப்பி கடைகளிலும் விற்பனைக்கு உண்டு. மில்க்வைற், யாழ்ப்பாணம். (ஏ 904)

### மரம்நடுவீர், மழைபெறுவீர்

வாகை மருது கன்றுகள் தேவைப்படும் தேவாலயங்கள் வாசிகசாலைகள் மற்றும் நிறுவனங்கள் எழுத்துமூலம் விண்ணப்பத்துடன் வந்து பெற்றுக்கொள்ளலாம். மில்க்வைற், யாழ்ப்பாணம். (ஏ 905)


## அஞ்சலி

(பண்டத்தரிப்பு)

மாவீரர்தின இறுதி நாளில் மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துமுகமாக பண்டத்தரிப்பு, சங்கானை, சித்தன்கேணி, இளவாலை, மாதகல் ஆகிய இடங்களிலும் கடைகள், வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன. (72)

# யாழ். காப்புறுதிக்கிளையில் வேலைகள் ஆரம்பமாகும்

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண பிராந்திய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பணிமனை மிக விரைவில் பொதுமக்களுக்கு உரிய காப்புறுதி வேலைகளை ஆரம்பிக்க உள்ளது.

இது பற்றி யாழ். மாவட்ட பிராந்திய முகாமையாளர் திரு கே. அப்புத்துரை கடந்த மாதம் 10ஆம் திகதி தொடக்கம் இப்பணிமனையில் உள்ளக வேலைகள் அனைத்தும் நடைபெற்று வருவதாகத் தெரிவித்தார்.

பிராந்திய அலுவலகத்தை மூடுவதுசம்பந்தமாகஇதுவரை எவ்வித முடிவும் மேற்கொள்ளப்படவில்லை என்றும்இராணுவப் போர் நடவடிக்கைகளின் போது வானத்தாக்குதலில் பிரதான வீதியில் உள்ள காரியாலயமும் பலத்தசேதமடைந்துள்ளது என்றும் அவர் மேலும் கூறியுள்ளார். (154)

# தீவுப்பகுதியில் சீ-பிளேன் தாக்குதல் முகாமிலிருந்து ஷெல்தாக்கு

(வேலணை நிருபர்)

வேலணை புளியங்கூடல் பகுதியில் கடந்த 27ம் திகதி இரவு 7-00 மணியளவில் தீவுப் பகுதியில் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சி-பிளேன் துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்டது.

இதனால் புளியங்கூடல் மகாமாரி அம்மன் கோவில் வீதியில் நின்ற வேலணை மேற்கைச் சேர்ந்த செல்வன் வன்னியசிங்கம் வித்தகன் (வயது 16) செல்வன் சாந்தலிங்கம், திருமாறன் (வயது 16) ஆகிய இரு இளைஞர்களும் காலில் தொடையில் காயம் ஏற்பட்டு வேலணை அரசினர் வைத்திய சாலையில் உடனடியாக அனுமதிக்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டபின் யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றார்கள்.

இதேவேளை ஊர்காவற்றுறை முகாமிலிருந்து இராணுவத்தினர் புளியங்கூடல் பகுதிகளை நோக்கி சென்ற பலத்த ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இந்த ஷெல் தாக்குதல்களினால் பல கட்டிடங்கள் சேதத்துக்குள்ளாகி வருகின்றன; புளியங்கூடல் மகாமாரியம்மன் ஆலயத்திற்கு முன்னால் உள்ள வீட்டு முற்றத்தில் விழுந்து வெடித்ததினால் வீடு சேதத்திற்குள்ளானதுடன் அங்கு நின்ற 9 வயதுச் சிறுமி ஒருத்தி காயத்திற்குள்ளானார்.

மற்றொரு ஷெல் விழுந்து வெடித்ததினால் திரு. நல்லையா (வயது 73) என்பவரும் அவரது பேரன் முறையான பரம்சோதி காண்டீபன் (வயது 17) என்பவரும் காயங்களுக்குள்ளாகி ஊர்காவற்றுறை, வேலணை அரசினர் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெற்று வருவதுடன் இன்னும் பலர் சிறு காயங்களுக்குள்ளாகி தனியார் வைத்திய நிலையங்களில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

சென்ற 27ம் திகதி தொடக்கம் ஊர்காவற்றுறையில் இருந்து ஷெல் தாக்குதல்கள் தொடர்ந்தும் இரவுபகலாக புளியங்கூடல், சுருவில் நாரந்தனைப் பகுதிகளை நோக்கி ஏவப்பட்டு வருகின்றது.

## மாங்குளத்தில்

(கிளிநொச்சி)

மாங்குளம் பகுதியில் மாவீரர் தினம் கொண்டாடப்பட்டது. இரண்டாம் யூனிற்றில் இடம்பெற்றவிழாவில் பாண்டியன்குளம் பிரதேசப் பொறுப்பாளர் திரு.பிரசாத் கலந்து கொண்டார். (83)

## கிளிநொச்சியில்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி நகரில் கடந்த புதன் காலை ஹெலித்தாக்குதல் இடம்பெற்றது. கரடிப்போக்கு பகுதியில் ஹெலி வேட்டுக்களை தீர்த்தவண்ணம் சென்றது. இதனால் நகரில் பதற்றநிலை ஏற்பட்டது.

## ஒருங்கிணைப்பு இணையம்

(யாழ்ப்பாணம்)

தமிழ்ப் பிரதேசங்களில் புனர்வாழ்வு நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து செயல்படுத்துவதற்கு அரச சார்பற்ற சமூக நிறுவனங்கள் 'வடக்கு-கிழக்கு பிரதேச ஒருங்கிணைப்பு இணையம்'' ஒன்றை உருவாக்கியுள்ளன.

இவ் அமைப்பு நேற்றுக் காலை றெட்பானா தலைமையகத்தில் நடைபெற்ற அரச சார்பற்ற சமூக நிறுவனங்களின் விசேட கூட்டத்தில் உருவாக்கப்பட்டது. (ச)

# நள்ளிரவு வேளையில் கடையுடைத்து கொள்ளை

(வட்டுக்கோட்டை)

கடந்த புதன்கிழமை நள்ளிரவு வேளையில் பலசரக்குக் கடை ஒன்றின் கூரையைப் பிரித்து உட்புகுந்த திருடர் கோஷ்டி ஒன்று சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான உணவுப்பொருட்களைத்திருடிச் சென்றுள்ளது.

இத்திருட்டுச் சம்பவம் வட்டுக்கோட்டை துணைவியில் உள்ள பல சரக்குக் கடை ஒன்றில் நடைபெற்றுள்ளது.

இக்கடையில் இருந்த அரசி, மா, சீனி, சர்க்கரை, உழுந்து பயறு முதலான பல உணவுப் பொருட்களும் மற்றும் பல சரக்குப் பொருட்களும் இத் திருடர் கோஷ்டியினரால் திருடப்பட்டுள்ளன. (139)

# உப்பள ஊழியருக்கு 5 மாதங்களாக சம்பளம் வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

வடபகுதி உப்பளங்களில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு கடந்த ஐந்து மாதங்களாகச் சம்பளம் வழங்கப்படவில்லை.

இது தொடர்பாக கொழும்பிலுள்ள தேசிய உப்புக் கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்திற்கு வடபிராந்திய உப்புக் கூட்டுத்தாபன முகாமையாளர் நேரில்சென்று பேச்சுவார்த்தை நடத்தியும் எவ்விதபயனும் ஏற்படவில்லை என்று கவலை தெரிவிக்கப்படுகிறது.

உப்பு விற்பனையின்மை, தொழில் ஸ்தாபனம் இயங்காமை, கூட்டுத்தாபன நிதி நிலைமை சீரின்மை ஆகிய காரணங்களை முன்வைத்து இச்சம்பளம் வழங்குவதில் தாமதம் ஏற்படலாமென்று தெரியவருகிறது.

இது தொடர்பாக மேற்படி வடபிராந்திய உப்புக் கூட்டுத்தாபன உயரதிகாரிகளை இம் மாதம் 4-ம் திகதி அளவெட்டியில் சந்திக்குமாறு வடபிராந்திய உப்புக் கூட்டுத்தாபன முகாமையாளர் கேட்டுள்ளார். (153)

# பிரபா பிறந்த தினக் கொண்டாட்டம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை சிற்றூரவையினர், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வேலுப்பிள்ளை பிரபாகரனின் 37வது பிறந்த நாளன்று பொதுமக்களுக்கு ரொபிகள் வழங்கிக் கொண்டாடினர். (154)

# தமிழ் அகதிகள் குழந்தைகளுக்கு தமிழகத்தில் கல்வி வசதி

(சென்னை)

''தமிழகத்தில் தங்கியிருக்கும் அனைத்துஇலங்கைத்தமிழ் அகதிகளின் குழந்தைகளும் தமிழக பாடசாலைகளில் கல்வி கற்க விரைவில் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும்,'.

மேற்படி தகவலை தமிழக குழந்தைகள் நலப்பராமரிப்புத் துறை அமைச்சர் திரு. சி. எஸ். ராமதாஸ் தெரிவித்தார்:

திருவண்ணாமலை, நாகபட்டினம், கோவில்பட்டி உட்பட அனைத்து அகதிகள் முகாம்களுக்கும் அவர் விஜயம் செய்தபின் கருத்து வெளியிடுகையிலேயே மேற்கண்டவாறுதெரிவித்தார். அவர் மேலும்தெரிவிக்கையில்: இலங்கைத்தமிழ் அகதிகளின் நலன்கள் சம்பந்தப்பட்ட விடயத்தில் தமிழக அரசு தன்னாலான சகலநடவடிக்கைகளையும் மேற்கொள்ள எப்பொழுதும் தயாராகவிருக்கிறது. இது பற்றி எவரும் ஐயப்படத் தேவையில்லை என்றார். (க)

## ஓராண்டு நினைவஞ்சலி



### திரு. ஆறுமுகம் சண்முகநாதன்

(முன்னாள் இலங்கை திறைசேரி சிறுப்பர்)

தோற்றம்: 1923-05-17 மறைவு: 1989-12-12

திதி: 1990-12-02

அன்பின் தெய்வமே, தாங்கள் எம்மைவிட்டு பிரிந்து ஓராண்டு முடிவுற்றது: ஆனால் தங்கள் நினைவு நிழல் எம்முள்ளத்தில் பசுமையாக இருக்கின்றது. ஆண்டு ஒன்று சென்றாலும் தங்கள் அன்பின் அரவணைப்பை எம்மால் மறக்க முடியவில்லை. குடும்பதலைவராய் குடும்ப விளக்காயிருந்து எமது குடும்பத்திற்கு ஒளிதந்தீர்கள். நோயுற்றிடாமல் நொந்து மனம் வாடாமல், பாயிற் படுக்காமல் பறந்து விட்டீர்களே, ஐயா. எண்ணி எண்ணி ஏங்கும் நெஞ்சத்தோடு அல்லும் பகலும் தங்கள் ஆத்ம சாந்திக்காக பிரார்த்தனை செய்யும்,

அன்பின்

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

பயிரிக்கூடல், காரைநகர். (சி-4154)

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



### பொன்னையா செல்வத்துரை

(பிரபல நொத்தாரிஸ் லிவாக்கர் யாழ்ப்பாணம்- கிளிநொச்சி மாவட்டங்கள்)

ஜனனம்: 21-01-1907

மறைவு: 14-12-1985

''உமது பசுமை நினைவுகள் என்றும் எமது நெஞ்சை விட்டகலா''

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல. 942 பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

இல: 1, துறைமுக வீதி, வாடியடி, பூநகரி.

(சி-4163)


## முக்கிய அறிவித்தல்

### யாழ். மாவட்ட பேக்கறி உரிமையாளர் சங்கம்

3 - 12 - 90 திங்கள் முதல் பாண்போடுவதை நிறுத்தி 3 - 12-90 காலை 10 மணிக்கு யாழ் பிரதான வீதியிலுள்ள பிறிமியர் பேக்கறிக்கு முக்கிய விடயம் சம்பந்தமாக ஆலோசிப்பதற்கு சகல பேக்கறி உரிமையாளர்களும் தவறுது சமூகம் அளிக்கவும்.

இப்படிக்கு,
N. பாலவிநாயகர்,
காரியதரிசி.

(சி-4161)

# "முஸ்லிம்கள் என்றால் இராணுவம் ஒன்றும் செய்வது இல்லை"

ஒரு காலகட்டத்தில் சினிமா பார்க்க ராமநாத புரம் வந்தவர்கள் இலங்கை தமிழர்கள். இன்று தங்கள் உயிரை கையில் பிடித்துக் கொண்டு ஓடோடி ராமேஸ் வரத்திற்கும் தனுஷ்கோடிக் கும் ஆயிரக்கணக்கான பேர் அகதிகளாக வந்துகொண் டிருக்கிறார்கள்.

இலங்கையில் கடந்த ஜூன் 11 முதல் விடுதலை புலிகளுக் கும், ராணுவத்திற்கும் நடந்து வரும் சண்டை அள

டர் வாங்க கடை வீதிக்கு சென்றேன். சிங்களவர் எங் கள் வீட்டை கொளுத்திவிட் டனர். குழந்தைகளை தூக்கிக் கொண்டு ஓடிவந்துவிட்டேன். எனது கணவர் என்ன ஆனார் என்பது தெரியவில்லை எனக் கண்ணீர் சிந்தினார் திருகோண மலை பிலமினோஸ்.

தலைமன்னார், மன்னார், பேசாலை, மட்டக்களப்பு, வவு னியா பகுதிகளில் இருந்து அகதிகள் அதிகமாக வருகின் றனர்.

யாழ்ப்பாணம், திருகோண

"சிங்கள ராணுவம் 'பொம் மர்' வைத்து தாக்குவதால் மக்கள் ஓடி வருகிறோம் என் றார் கென்னடி.

"தலைமன்னார் பகுதியில் இருந்து 17 பேர் ஒருபடகில் வந்தோம். 4 பேர் ஒரு உடலை இழுத்துக் கொண்டு நீந்தி வந் தனர். படகை நிப்பாட்டி இழுத்து வந்த உடலையும் 4 பேரையும் ஏற்றிக் கொண்டு திரும்பி பேசாலை சென்று இறந்தவரை எரித்து விட்டு வந்தோம்" என்றார் சக்தி கோட்.

நீந்தி வந்தவர்கள் நம்மிடம் 32 பேர் தலைமன்னாரில் இருந்து ஒரு படகில் வந் தோம்; சிங்கள படை, எங்

கள் படகை கவிழ்த்தி விட்டு போய் விட்டது. அதில் உயிர் பிழைத்தது நாங்க நால்வர் தான் என்றனர்.

"சிங்கள ராணுவத்திடம்

அகதி.

8-07-90 ல் எங்களுடன் வந்த ஏழு படகை சிங்கள ராணுவம் கடத்திச் சென்று விட்டது. இதை இங்கு அதி காரிகளிடம் தெரிவித்தும் பயன் இல்லை.

இப்போது மக்கள் கொடுக் கும் பணத்தை மட்டும் வாங் கிக் கொண்டு ஏற்றி வருகி றோம். ஒருதடவை வந்து போக 65 லீற்றர் டீசல்

**தமிழ்நாட்டிற்கு வந்து குவியும் ஈழத்தமிழ் அகதிகள் அவலம் பற்றி தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் 'நக்கீரன்' சஞ்சிகையில் வெளியான கட்டுரையை இங்கு தருகின்றோம்.**

சிக்கிக் கொள்ளும் ஆண்களை தலையில் டயரை மாட்டி விட்டு பெட்றோல் ஊற்றி கொளுத்தி விடுகின்றனர்: பெண்களை மானபங்கம் செய் கின்றனர் என்றார் மற்றொரு

செலவாகிறது; டீசல் ஒரு லீற்றர் 65 ரூபாய் அங்கு விற்கிறது. அதனால்தான் கொடுக்கும் பணத்தை வாங்கி கொள்கிறோம் என்றார் பட கோட்டி செல்வம்.

## "முஸ்லிம் கிராமம் எருக்கலம்பிட்டிக்கு குண்டு போடுவதில்லை"

வுக்கு மீறிவிட்டது; அப்பாவி தமிழ் மக்கள் தங்கள் உடமை களை விட்டு, விட்டு தமிழகத் திற்கு வந்து குவிய ஆரம் பித்துவிட்டனர்.

பல ஊர்களில் சிங்கள இராணுவத்தால் பல கடை கள் உடைக்கப்பட்டு சாமான் கள் கொள்ளையடிக்கப்படு கிறது; உணவுப் பொருட் களுக்கு கடுமையான தட்டுப் பாடு உள்ளது. விருப்பங் குளம், கொசிக்குளம், முதலி யார்குளம், நெரியாகுளம், பாலர்குளம், நெடுங்

**சிங்கள இராணுவத் திடம் சிக்கிக்கொள்ளும் ஆண்களை தலையில் டயரை மாட்டி பெற்றோல் ஊற்றி கொளுத்தி விடுகின்றனர். பெண்களை மானபங்கம் செய்கின்றனர்.**

கரைசேனை, செட்டிக் குளம், முகத்தான்பாலம், முட்டையிட்டபுரம், புளிய ஆலங்குளம், பேசாலை மாவட் டம், மன்னார் மாவட்டம் ஆகிய பகுதிகளில் மக்களுக்கு உணவு கிடைக்காமல்தான் வந்துள்ளோம் எனக் கூறினார் அகதியாக வந்திருக்கும் செட் டிக்குளம் மாரியப்பன்.

வேப்பங்குளத்திற்கும், நெடு குளத்திற்கும் இடையே லொறியில் பத்து குடும்பம் பேசாலையை நோக்கி வந்து கொண்டிருக்கும்போது ஷெல் அடித்து ஒட்டுமொத்தமாக இராணுவம் அழித்துவிட்டது என்றார் சிட்டிகுளத்தைச் சேர்ந்த ராஜரத்தினம்.

குழந்தைகளுக்கு பால் பவு

மலை, முல்லைத்தீவு, வல்வெட் டித்துறை, பருத்தித்துறை ஆகிய பகுதிகளிலிருந்து கொஞ்சப் பேர்தான் வந்துள் ளதாக அகதிகள் தெரிவித்த னர்.

"நான் சிலோன் டிரான்ஸ் போர்ட்டில் டிரைவராக இருந் தேன். 1983ல் சண்டையின் போது ஈராக் போய்விட்டு, அமைதிப்படை வந்தவுடன் திரும்பவும் சிலோன் வந்தேன். ஈராக்கில் சம்பாதித்த பணத் தில் சொந்தமாக கார் வாங்கி ஓட்டிவந்தேன். இப் போது அந்தக் காரை சிங்கள வெறியன்கள் கடத்திச் சென்று விட்டான்கள்.

முஸ்லீம்கள் என்றால் ஒன் றும் செய்வது இல்லை இராணு வம். எருக்கலம்பிட்டி என்ற கிராமத்தில், அது முஸ்லிம் பகுதி என்பதால் இதுநாள் வரை ஒரு குண்டுகூட விழுந்த தாக இல்லை என்றார் விடத் தல்தீவில் உள்ள முருங்கன் பகுதியில் இருந்துவந்த ஏ. எஸ், செல்வம்.

"எங்களைப் பொறுத்தவரை எங்கள் நாட்டுப் பொடியன் களுக்குத்தான் (புலிகள்) ஆத ரவு. என்னுடன் வந்த தம் பியை சிங்கள இராணுவம் கடத்திவிட்டது என்று கதறி அழுதார் வட்டக்கண்டல் பகு தியைச் சேர்ந்த தயாவதி.

இலங்கையில் அரிசி ஒரு கிலோ 22-00 ரூபாயும், பருப்பு நினைத்துப் பார்க்கவேமுடியாத விலையும், சீனி ஒரு கிலோ 60-00 ரூபாயும் விற்கிறது. இதனால்தான் நாங்கள் தமிழ் நாட்டுக்கு வரவேண்டியதாகி விட்டது என்று ராஜாக்கிளி சொன்னார்.

பேசாலையில் 50,000 பேர் 'போட்'டுக்காக வெயிட் பண்ணி உள்ளார்கள். பேசா லையில் அவர்களுக்குப் போதிய உணவின்றிப் பட்டினியால் வாடுகின்றனர். 1983ல் நடந் ததைவிட, இப்போது சுமார் 2 லட்சம் பேர் அகதிகளாக வருவார்கள் என நமது காதில் முணுமுணுத்துச் சென்றார் ஓர் அகதி.

வசதி குறைந்த ஏழைகள் தான் அகதிகளாக வருகின்ற னர்.

## வீதிகளுக்கு மாவீரர் பெயர்

(அச்சுவேலி)

அச்சுவேலி தெற்குப் பகுதி யில் பயித்தோலை வீதிக்கு கோணேஸ் வீதி (இ. தவராஜா நாவற்காடு) என்றும், அச்சு வேலி ஆஸ்பத்திரி வீதிக்கு (க. கணேசமூர்த்தி நாவற் காடு) என்றும், காட்டுமலைக் கந்தசாமி கோயில் வீதிக்கு ஹமீத் வீதி (சி. இராசலிங் கம் நாவற்காடு என்றும், முத்துமாரி அம்மன் கோயில் வீதிக்கு அம்பி வீதி[சி. கன கரத்தினம் நாவற்காடு) என் றும் பயித்தோலை முதலாம் குறுக்கு வீதிக்கு தவம் வீதி [ந. தவராசா நாவற்காடு] என்றும் நாச்சிமார்கோயில் வீதிக்கு ஹமீத் வீதி [மு. ஜெய சோதி நாவற்காடு] என்றும் விக்னேஸ்வரா வீதிக்கு அல் பேட் வீதி [க. ரூபநிதி விக்கி னேஸ்வரா வீதி] என்றும் 9ம் 10ம் வட்டார எல்லை வீதிக்கு சத்தீஸ் வீதி [சத்தீஸ்வரன் அச்சுவேலி] என்றும் அச்சு வேலி வடக்கு வீதிக்கு பவான் வீதி] நவநீதி விக்னேஸ்வரா வீதி என்றும் அம்மன்கோயில் வீதிக்கு பவான் வீதி [ப. சர வணனந்தன் சிவசக்தி கோயி லடி] என்றும் பெயர் சூட்டப் பட்டுள்ளது.

## போராளிகள் மரணிக்கும் தறுவாயிலும் அப்பாவென்றே, அம்மாவொன்றே அழைக்காமல் நாட்டைக்காக்குமாறு தனது துப்பாக்கியை ஒப்படைக்கின்றான்

நவம்பர் இருபத்தாறும், இருபத்தேழாம் திகதி கோப் பாய்மண் புனிதம் பெற்றது. வரலாற்று நாயர்களாக, ஆயி ரம் ஆயிரம் மாவீரர்களின் பெற்றோர்களும், உறவினர் களும் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கல்லூரிக்கு அழைத்து வரப்பட்டனர். வானமோ, நல்லார் ஒருவர் உளரோ என மழையைப் பொழிந்துகொண் டிருந்தது. வந்தாரை வர

வேற்கும் பாணியில் ஆயிரம் ஆயிரம் தொண்டர்கள், விருந் தினரை வருக வருகவென மகரகும்பங்கள் வைத்து சந் தன ஆராத்தியெடுத்து வர வேற்றனர். பெற்றோர்கள் அனைவரது மனங்களிலும் தன்மகனை நாட்டுக்காக அர்ப் பணித்த பெருமையில் சென்று கொண்டிருந்தார்கள். எல் லோர்க்கும் எல்லாவசதியும் செய்யப்பட்டுள்ளது. இது உங்கள் நாடு, உங்கள் வீடு, நாமெல்லாம் விடுதலைக்காக போராட திடசங்கற்பம் எடுத் துள்ளோம். எங்கள் முடிவு தமிழ் ஈழம்தான் என்ற உரை யாடலுடன் கூடிக் குலவி சேமம் விசாரித்துக்கொண்ட னர். எல்லோர் மனதிலும் ஒரு விடுதலை உணர்வு நீண்ட இடைவெளியில் இப்படியானதொரு சந்திப்பு. உரையாடல் எல்லாம், எல் லாப் பெற்றோர்களுக்கும் நெகிழ்வை ஊட்டின. வேளா வேளைக்குத் தொண்டர்களின் உபசரணை அவர்களை எல்லாம் வியக்க வைத்தன.

அடிக்கடி போராளிகளின் கடந்த கால வாழ்க்கைகளை நினைவூட்டிய சொற்பொழிவு கள் ஒவ்வொரு பெற்றோரை யும் "தன் மகன் சான்றோ னெனக் கேட்ட தாய்" என் பதை நினைவூட்டின. தலைவர் களின் உரையைக் கேட்டதும் "போராளிகள் மரணிக்கும் தறுவாயிலும் அம்மா என்றோ அப்பா என்றோ அழைப்ப தில்லை. அவன் மரணிக்கப் போகிறான் என உணர்ந்த

வுடன், தனது கையிலுள்ள துப்பாக்கியை நாட்டைக் காக்க சக போராளியிடமே ஒப்படைக்கிறான்" என்று கூறியபோது ஆயிரக்கணக் கான பெற்றோர்களின் கண் களில் இருந்து நீர் சொரிந் தது. பல பெற்றோர்கள் அந் தக் கண நிமிடத்திலும் தமது பிள்ளைகள் மரணிக்கவில்லை; அவர்கள் வாழ்ந்துகொண்டு தான் இருக்கிறார்கள் என உரையாடியது எம்மையெல் லாம் மெய் மறக்கவைத்தது.

இரண்டு தினங்களும், கலை நிகழ்ச்சிகள், வரலாற்று ஆவண கண்காட்சிகள், கதா காலேட்சபங்கள் அனைத்தும் ஒவ்வொரு மாவீரர்களின் பெற்றோரின் மனத்திலும் இனம்புரியாத விடுதலை உணர்வையூட்டின.

காலங்கள் மாறலாம், வர லாறு என்றுமே நிலைக்குமென் பதற்கு மாவீரர்களின் பெற் றோரது இருநாள் முகாம் வழி சமைத்துவிட்டது. ஆனால், எமது தலைவர் மட்டும் வந்து எங்களைச் சந்தித்திருந்தால் எங்கள் வாழ்வில் காணக் கிடைக்காத பாக்கியமாக கருதி இருப்போம். அது கைகூடவில்லை: அதனையும் நாம் காண்போம் என கூறி யது எம்போன்றவர்க்கு அவர் களது உணர்வுகளை தடுக்க யாரும் இல்லை என்பதை எடுத் துக்காட்டின: முகாமில் தங்கி யிருந்த அத்தனை பெற்றோர் களின் மனத்திலும் நிறைவு நாள் மிஞ்சியிருந்தது. (ச)

## இராசி பலன்

2-12-1990

ஞாயிற்றுக்கிழமை

பூரணை பி.ப. 2.33 வரை; ரோகினி பின் இரவு 2.50வரை சித்தயோகம், பூரணை விர தம், இராகுகாலம் மாலை 4.54 முதல் 6.16 வரை; நல்லநேரம் காலை 9.15முதல் 10.45 வரை.

மேஷம்: எதிர்பாராத சிக கல் சபலபுத்தி. தொழில் பாதிப்பு குடும்பவிரோதம் அசதி.

இடபம்: தொழில் லாபம், கடமையுணர்வு, சகோதர வருகை குடும்பசிறப்பு புகழ்.

மிதுனம்: அதிகயோசனை, வீட்டில் பிரச்சனை அந்நியர் தலையீடு, பெரியோர் பகை.

கடகம்: தற்பெருமை, பண வரவு. தொழில்முயற்சி குடும்ப மகிழ்ச்சி விருந்துபசாரம்.

சிங்கம்: தொழில் போட்டி. தாயுள்ளம், ஞானிகள் ஆசி, குடும்ப வேற்றுமை.

கன்னி: மனவேதனை குடும்ப பிணக்கு, தொழில் கஷ்டம் குறைகேட்டல்.

துலாம்: அற்பர் நேசம், அலைச்சல் மிகுதி மனைவிக்கு நோய், பணச் செலவு.

விருச்சிகம்: அந்நியவாசம், தொழில் குறைவு, தயாள சிந்தை, எதிர்நீச்சல், அகால போஜனம்.

தனுசு: காரியசித்தி, இன சன வருகை, குடும்ப உல்லா சம் சுபகாரிய செலவு.

மகரம்: அதிகாரிகள் சினம், வேலைப்பளு. தொழில் அலைச் சல் குடும்ப முரண்பாடு.

கும்பம்: காணிப்பிணக்கு வாய்த்தர்க்கம், மனக்குழப் பம் பெரியவர் ஆசி.

மீனம்: பிரயாணம் காரிய வெற்றி, நண்பருதவி கடன் வசூல், பாராட்டு.

ஜோஸ்யர்.

## அரச திணைக்களங்களில் மும்மொழிகளையும் பயன்படுத்த பணிப்பு

(மானிப்பாய்)

அரச திணைக்களங்களில் கருமமாற்றும் பொழுது தமிழ், சிங்கள, ஆங்கில உப யோகம் தொடர்பான ஏற் பாடுகளை கண்டிப்பாக கடைப் பிடிக்குமாறு சகல அரச திணைக் களங்களும் கேட்கப்பட்டுள் ளன.

இது சம்பந்தமாக உள்நாட் டலுவல்கள் அமைச்சினால் அனுப்பி வைக்கப்பட்ட சுற் றறிக்கையில் பொது மக் களிடமிருந்து சிங்களத்தில் அல்லது தமிழில் அல்லது ஆங்கிலத்தில் பெறப்படும் கடிதங்களுக்கான பதில்கள் அந்தந்த மொழியிலேயே அனுப்பப்படல் வேண்டும்.

பதிலொன்றில் அல்லது வெளியீடொன்றில் பிரதியொன்றை பெறும் உரித்துடைய ஒருவருக்கு அவரினால்செய்யப்படும்கோரிக் கைகளுக்கு ஏற்ப அப்பதவி யின் அல்லது வெளியீட்டின் பிரதியொன்று அல்லது சுருக்கமொன்று சிங்களத்தில் அல்லது ஆங்கிலத்தில் தமிழில் வழங்கப்படல் வேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

## திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

வான்தாக்குதலினால் தரை மட்டமாக்கப்பட்ட யாழ். கொட்டடி சனசமூகநிலையம் தற்காலிகமாக சிவன்பண்ணை வீதியில் நிலையத்தலைவர் திரு. மு. ஜெயதீசனால் திறந்துவைக் கப்பட்டது.

★ ஆசிய கிண்ண கிரிக்கெட்

# இலங்கையில் நிலைமை மோசம் இந்தியாவிற்கு இடமாற்றம்

(புதுடில்லி)

இலங்கையில் தொடர்ந்தும் கடும் யுத்தம் இடம்பெற்று வருவதையடுத்து இங்கு நடைபெறவிருந்த 'ஆசிய கிண்ண' கிரிக்கெட் போட்டி இந்தியாவுக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இத்தகவலை 'ஆசிய கிண்ண' கிரிக்கெட் அமைப்பாளர் குழு தெரிவித்துள்ளது. நான்குநாடுகள் கலந்துகொள்ளும் இப்போட்டிகள் இம்மாதம் 25ம் திகதி கிறிஸ்மஸ் தினத்தன்று ஆரம்பமாகிறது.

இதேவேளை இலங்கையுடன் போட்டிகளில் கலந்துகொள்ள வருமாறு விடுக்கப்பட்ட அழைப்புகளை இங்குள்ள யுத்த நிலையை காரணம்காட்டி பல நாடுகளும் மறுத்துவிலன வாம். (சி)

## அரபுக்களின் ஆதரவு பெற இலங்கை ஸார்ஜா செல்கிறது

[ஸார்ஜா]

வளைகுடாவில் எழுந்துள்ள போர் சூழ்நிலை காரணமாக இம் மாதம் நடைபெறவிருக்கும் 'ஸார்ஜா கிண்ண' கிரிக்கெட் போட்டியில் கலந்து கொள்ள பல நாடுகள் மறுத்துள்ளபோதிலும் இலங்கை சம்மதம் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானும், இலங்கை அணியுமே தற்போது இப்போட்டியில் 20ம், 21ம் திகதிகளில்கலந்துகொள்ளவுள்ளன; இந்தியா, ஆஸ்திரேலியா, மே. இந்தியா, இங்கிலாந்து, நியூஸிலாந்து, சிம்பாவ்வே ஆகிய நாடுகள் மறுப்புத்தெரிவித்துள்ளன.

அரபு நாடுகளின் இராணுவ உதவியைப் பெற இலங்கை முயன்றுவருவதால் இப்போட்டியில்கலந்துகொள்ளஇலங்கை முன்வந்துள்ளதாக அவதானிகள் தெரிவித்துள்ளனர். [சி]

## இலங்கை தோல்வி

[புதுடில்லி]

இலங்கை-இந்திய அணிகளுக்கிடையில் நேற்று நாக்பூரில் நடைபெற்ற சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை 19 ஓட்டங்களால் தோல்வியடைந்தது;

முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய இணி 45 ஓவர்களில் 5 விக்கெட் இழப்புக்கு 245 ஓட்டங்களைப் பெற்றது. ரவி சாஸ்திரி ஆட்டமிழக்காமல் 101 ஓட்டங்களையும், என். எஸ். சிது 52 ஓட்டங்களையும், ரெண்டுல்கர் 36 ஓட்டங்களையும் பெற்றனர்.

இலங்கையணி 45 ஓவர்களில் 7 விக்கெட் இழப்புக்கு 226 ஓட்டங்களைப் பெற்றது. அரவிந்த டி சில்வா 110 ஓட்டங்களையும், ஹசான் திலகரட்ண 39 ஓட்டங்களையும் பெற்றனர். அரவிந்த சிறந்த ஆட்டக்காரராகத்தெரிவுசெய்யப்பட்டார்: [சி]

### மண்டைதீவு

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

நோக்கிக் கடும் பிரங்கித் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதலில் குருநகரைச் சேர்ந்த வைத்தியன் இராசேந்திரம் (வயது 60), பிரான்ஸிஸ் (வயது 45) ஆகியோர் கொல்லப்பட்டனர். சவரியான் மரியதாஸ் (வயது 35) படுகாயமடைந்தார்; இவர்களது படகும் இரண்டாகப் பிளந்தது; (153)

### முஸ்லிம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு-கிழக்கில் தமிழர்களால் முஸ்லிம்கள் கொல்லப்படுவதாகவும், சொல்லொண்ணாத்துயர் அடைவதாகவும் வீடியோப் படங்கள் மூலம் பல இடங்களில் மசூதிகளில் பிரசாரம் செய்யப்பட்டுள்ளது.

மசூதிகளில் தொழுகை, கூட்டம் நடை பெறும் போது அப்பகுதியில் பொலிஸார் பலத்த கண்காணிப்பில் ஈடுபட்டு வருவதாகவும் கலவரம் எதுவும் ஏற்படாதவகையில் செயற்படுவதாகவும் அங்கிருந்து வரும் பலர் தெரிவித்துள்ளனர்: (சி)

### கருணாநிதி

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பெறலாமென பி. பி. ஸியின் முன்னாள் இலங்கைக்கான நிருபர் திரு. ஹம்பிறி ஹொக்லி தெரிவித்தார்;

திரு: கருணாநிதியின் ஆட்சியையும் விடுதலைப் புலிகளையும் இணைத்து மத்திய அரசும் அ. தி. மு. க, இந்திரா காங்கிரசும் தொடர்ந்து கடும் குற்றச்சாட்டுகளைச் சுமத்தி வருகின்றன. (சி)

### துணிச்சல்மிகு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

அனுமதிக்கப்பட்டிருந்த பாலமோட்டையைச் சேர்ந்த பொன்னையா அருணாசலம் (வயது 54) நேற்று மரணமானார்.

இவரின் சமயோசிதமும் துணிச்சலும் மிகுந்த செயலால் சிங்கள சிப்பாய் ஒருவர் தன்னைத்தானே கொலைசெய்ய நேர்ந்தது குறிப்பிடத்தக்கது. (153)

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லத்துரை விசாலாட்சி

மண்டைதீவு 8-ம் வட்டாரத்தைச் சேர்ந்த திருமதி செல்லத்துரை விசாலாட்சி காலமானார். இவர் செல்லத்துரையின் அன்பு மனைவியும், சின்னம்மா, காலஞ்சென்ற கார்த்திகேசு, செல்லையா ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற பொன்னம்பலம் தம்பதிகளின் மகளும், புண்ணியமூர்த்தி, (அல்லைப்பிட்டி), கிருபாமூர்த்தி, ஏகாம்பரம், பகவதிதேவி, சேதுராசா (கொத்தணி அதிபர், நம்பொலை) காலஞ்சென்ற மகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும், அருளாம்பிகைதேவி, சரோசினிதேவி, கௌரி (ஆசிரியை, இயக்கச்சி ம. ம. வித்தியாலயம்) புண்ணியகாந்தன் ஆகியோரின் மாமியாரும் ஆவார். அன்னாரின் சமக்கிரியைகள் இன்று ஞாயிற்றுக்கிழமை (2-12-90) பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று மண்டைதீவு பொதுமயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச்செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
புண்ணியமூர்த்தி

(சி 4162)

# கசிப்பு விற்பனையாளர்கள் புலிகளினால் கைது

(புங்குடுதீவு)

புங்குடுதீவில்கசிப்புவிற்பனையில் ஈடுபட்டிருந்த பலர் விடுதலைப்புலிகளின்மக்கள்முன்னணியினரால் நேற்று முன்தினம் கைதுசெய்யப்பட்டுள்ளார்கள்.

புங்குடுதீவில் சகல பகுதியிலும் கடந்த 3 நாட்களாக கசிப்பு ஒழிக்கும் முயற்சியில் விடுதலைப்புலிகள் கடும் தேடுதல் வேட்டைகளை நடாத்தி வருகின்றார்கள்.

புங்குடுதீவு கிழக்கு 10ம் வட்டாரத்திலும், பெருங்காடு துணுக்கல், இறுப்பிட்டி போன்ற பகுதிகளில் திடீர் தேடுதல்களை நடாத்தி விற்பனையில் ஈடுபட்டிருந்த கசிப்பு வியாபாரிகள் பலரை கைது செய்துள்ளனர்.

விற்பனை செய்துவந்த கசிப்பும் மறைந்து வைத்திருந்த கசிப்பு பரல்களும் மற்றும் பல உபகரணங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் தொடர்ந்து கசிப்பு ஒழிப்புவேலைகளில் விடுதலைப்புலிகள் ஈடுபட்டுவருகின்றார்கள்.

மேற்படி நடவடிக்கையில் புங்குடுதீவு பிரதேசப் பொறுப்பாளர் திரு. மங்களேஸ் தலைமையிலான குழுவொன்று ஈடுபட்டுவருகிறது. (101)

### ஸ்ரீலங்காவின்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

திரு: லீ-பெங்கின் விஜயம் தென்காசிய பிராந்திய நாடுகளுடன் சீனாவின் உறவை மேம்படுத்துவதற்கானதே என சீன அரசு அறிவித்துள்ளபோதிலும், இலங்கையின் அழைப்பை ஏற்றே அவர் இங்குவருகிறார்.

சீனாவிடமிருந்து இலங்கை தொடர்ந்தும் விமானங்கள் உட்பட பெருமளவு இராணுவ தளபாடங்களை கொள்முதல் செய்துவருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது; (சி)

### திருமலையில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ஞர்கள் இதில் அடங்குவர்.

கைதான அனைவரும் எந்த முகாமிற்குக் கொண்டுசெல்லப்பட்டனரென இதுவரை தெரியவில்லை, கைதானவர்களில் எவரும் விடுதலைசெய்யப்படவில்லை. (வி)

### பொம்மர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வட்டமிட்ட பொம்மர் ஒன்று திடீரென இருகுண்டுகளை அளவெட்டி கூட்டுறவாளர் வீதியில் வீசிய போது இரு வீடுகள் பலத்த சேதமடைந்தன. அருகில் உள்ள வீடுகள் சிலவும் சேதமடைந்தன.

வலி வடக்கில் பல பகுதிகளிலும் நேற்று பரவலாக ஷெல் தாக்குதலும் ஹெலி தாக்குதலும் இடம் பெற்றது.

### திருநெல்வேலியில்

திருநெல்வேலி பகுதியில் நேற்றுக்காலை பொம்பர் விமானம் இரண்டு குண்டுகளை போட்டது அதன்காரணமாக நால்வர் காயமடைந்தனர். மேற்படி குண்டுத் தாக்குதலினால் கே: சதாசிவம் எம். பர்ராஜசேகரம், எஸ்: தாஸ் ஆகியோரின் வீடுகள் சேதமடைந்தன.

### சாவகச்சேரியில்

சாவகச்சேரி நகர்பகுதியில் நேற்றுக்காலை ஹெலிகொப்டர் பரவலாக தாக்குதலை நடத்தியது

கைதடியைச் சேர்ந்த சிறிகாந்தரூபி (வயது 19) ஹெலி தாக்குதல் காரணமாக காயமடைந்தார், (153)

# 'விடுதலைவேதங்கள்' அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் கலை, கலாசார பிரிவினர் தமிழீழக் கலைஞர்களுடன் இணைந்து உருவாக்கிய 'வேங்கைகளின் விடுதலை வேதங்கள்' என்ற பாடல் ஒலிப்பதிவு நாடாவின் அறிமுகவிழா இன்று ஞாயிறு காலை 10 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறுகின்றது.

விடுதலைப்புலிகள் கலை, கலாசாரப் பிரிவுப் பொறுப்பாளர் திரு புதுவை இரத்தினதுரையின் தலைமையில் நிகழும் இவ் விழாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித்தலைவர்கள் சிறப்புரையாற்றுகின்றனர்.

விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. பேபிசுப்பிரமணியம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைக்கும் இவ் விழாவில் அகில இலங்கை கம்பன்கழக அமைப்பாளர் திரு. இ. ஜெயராஜ் கலாநிதி திரு. நா. சுப்பிரமணியஐயரும் பாடல்கள் பற்றிய அறிமுக உரையை நிகழ்த்தவுள்ளனர். கலை, கலாசார பிரிவின் சார்பில் விடுதலைப்புலிகளின் மூத்த உறுப்பினர் திரு. தேவர் நன்றியுரை வழங்குவார். தமிழீழத்தின் சகல கலைஞர்களையும் விழாவில் கலந்து சிறப்பிக்கும்படி கலை கலாசாரப் பிரிவினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (153)

### ஆனையிறவு

1-ம் பக்கத் தொடர்ச்சி]

மோதல் இடம்பெற்றது. பின் வாங்கிய இராணுவம் பலியான, காயமடைந்த இராணுவத்தினரை தோளில் தூக்கிச் சென்றது;

முகாம் திரும்பியபின் கடுமையான ஷெல் தாக்குதலை இயக்கச்சி, சோரன்பற்று, மாசார், கோயில் வயலை ஆகிய இடங்களை நோக்கி மேற்கொண்டது. (வி)

### வீரமரணம்

[யாழ்ப்பாணம்]

மாவிட்டபுரம் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் யோகா (தம்பித்துரைச்சாமி சிதாலட்சுமி - மயிலிட்டி) வீரமரணமடைந்தார். (வி)

# வவனியாவில் கடும் மோதல் பல இராணுவம் பலி

(வவுனியா)

வவுனியா மாமடு ராணுவ முகாமிலிருந்து ராணுவத்தினர் இளம்மருதங்குளம் பகுதி ஊடாக சேமமடுவில் முதலாம் யூனிட்டுக்கு வந்தபோது விடுதலைப் புலிகள் இடைமறித்துத் தாக்கியதில், ராணுவத்தினருக்குப் பலத்த சேதமேற்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மேற்கண்ட பகுதியில் நிலைகொண்டுள்ள ராணுவத்தினர் மீது விடுதலைப் புலிகள் நேற்று மாலை 3-மணி முதல் இரவு 7 மணிவரை நடாத்திய தாக்குதலில் பல ராணுவத்தினர் கொல்லப்பட்டதுடன், பலர் படுகாயமடைந்ததாகவும் கூறப்படுகின்றது-

சண்டை நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற இப்பகுதியில் பலதடவைகள் ஹெலிகொப்டர்கள் இறங்கி இறந்த இராணுவத்தையும், காயமடைந்தவர்களையும் ஏற்றிக் கொண்டு செல்வதையும் காணக்கூடியதாக இருந்ததாக விடுதலைப் புலிகள் தெரிவித்தனர். (வி)

## பேச்சு நடாத்த இணக்கம்

(பாக்தாத்)

குவைத் விவகாரம் குறித்து அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தை நடாத்த தயாரென ஈராக் நேற்று அறிவித்தது; இதன் மூலம் போர்சூழ்நிலை தவிர்க்கக்கூடிய சாத்தியம் உருவாகியுள்ளது.

ஈராக் வெளியுறவு அமைச்சர் ஜனுப் தாரிஸ் அஸீஸ் விரைவில் அமெரிக்க அதிபர் திரு. புஷ்சை சந்தித்து பேச்சுக்கள் நடாத்தவுள்ளார். (சி)

### கசிப்பு வேட்டை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ், கச்சேரிக்கு அருகாமையிலுள்ள நரியன்குண்டுப் பகுதியில் விடுதலைப் புலிகள் நடாத்திய திடீர் கசிப்பு வேட்டையில் யாழ், நகரில் உள்ள பிரபல கல்லூரிகளைச் சேர்ந்த எட்டு ஆசிரியர்களும், இரு டாக்டர்களும் உட்பட வேறு சிலரும் வசமாக சிக்கிக் கொண்டனர்.

கசிப்பு விற்றவருக்கும் அதைக் குடித்தவர்களுக்கும் விடுதலைப் புலிகள் கடும் தண்டனை விதித்துள்ளதாக தற்போது தெரியவந்துள்ளது (வி)

## விஜயலக்ஷ்மி பண்டிட் காலமானார்

முன்னாள் பாரதப் பிரதமர் ஜவஹர்லால்நேருவின் தங்கை திருமதி விஜயலக்ஷ்மி பண்டிட் 90 ஆவது வயதில் நேற்றுக்காலை டேராடூன் நகரில் காலமானார்;

## சிலிப்பர்கட்டை பாவனைக்கு தடை

(யாழ்ப்பாணம்)

தமிழீழத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் புகையிரத தண்டவாளங்கள் சிலிப்பர் கட்டைகள் ஆகியவற்றை பொதுமக்கள் எக்காரணம் கொண்டும் பாவிப்பது தடை செய்யப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தெரிவித்துள்ளது.

பொதுமக்களால் இப் பொருட்கள் எடுக்கப்பட்டு இருப்பினும் அவற்றை உடனடியாக எமது பிரதேசப் பிரிவுச் செயலகத்தில் திருப்பி ஒப்படைக்குமாறு வேண்டப்படுகிறீர்கள்; தொடர்ந்தும் இவ்வாறான பொருட்கள் பாவனைக்கு வைத்திருப்பின் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படும்;

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தினரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி. 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990ம் ஆண்டு மார்கழி மாதம் 02-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது;

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.